# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2015 - 2016

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

சுட்டெண்:..........................................................   நேரம்: 180 மணித்துளிகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. நெஞ்சையள்ளும் மணியாரம் எனப் புகழப்பட்ட நூல்

அ) மணிமேகலை ஆ) வளையாபதி

இ) சிலப்பதிகாரம் ஈ) சீவகசிந்தாமணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன

அ) மூவிடம் ஆ) முப்பால் இ) முத்தமிழ் ஈ) முக்கனி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. **பூவனம்** என்பது

அ) மாஞ்சோலை ஆ) பூஞ்சோலை

இ) பனஞ்சோலை ஈ) தென்னஞ்சோலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. **பன்னூறு** என்பதைப் பிரித்து எழுதினால்

அ) பன் + நூறு ஆ) பல + நூறு

இ) பல + னூறு ஈ) பன் + னூறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. **ஓடிடும் தமிழா** என்ற பாடலைப் பாடியவர்

அ) உதயைவீரையன் ஆ) இரவி

இ) அம்பி ஈ) சாலைஇளந்திரையன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. **விளைபயிர்** என்பது

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) வினைத்தொகை ஈ) உம்மைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. ஆடலரசிக்கான பட்டத்தை மாதவிக்கு வழங்கியவன்

அ) மாநாய்கன் ஆ) கோவலன்

இ) மாடலன் ஈ) மன்னன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. எதற்கும் ஓர் எல்லையுண்டு என்பதை விளக்கும் பழமொழி

அ) பூவுடன் சேர்ந்த நாரும் மணக்கும்.

ஆ) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்.

இ) கழுதை அறியுமா கற்பூரவாசனை.

ஈ) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. குதிரை ஓட்டினான் என்பதில் தொக்கி நிற்கும் வேற்றுமை உருபு

அ) ஆல் ஆ) ஐ இ) அது ஈ) கண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. மேடுபள்ளம் என்பது

அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்குத்தொடர்

இ) இணைமொழி ஈ) அடுக்கிடுக்குத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. கோவலன் காற்சிலம்பை விற்கச் சென்றது

அ) மதுரைக்கு ஆ) பூம்புகாருக்கு

இ) காஞ்சிக்கு ஈ) காசிக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. ஏழைகளின் உள்ளங்களில்தான் இறைவன் இருப்பான் என்ற கருத்துப் புலப்படும் பாடல் தலைப்பு

அ) இனியும் ஆ) ஓங்குபுகழ் கற்கள்

இ) ஓடிடும் தமிழா ஈ) மானிடா சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. **பொற்றொடி வருகின்றாள்** என்பது

அ) அன்மொழித்தொகை ஆ) பண்புத்தொகை

இ) உம்மைத்தொகை ஈ) வினைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. **விளிவேற்றுமை** என அழைக்கப்படுவது

அ) முதலாம் வேற்றுமை ஆ) மூன்றாம் வேற்றுமை

இ) எட்டாம் வேற்றுமை ஈ) ஐந்தாம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. **இருமுதுகுரவர்** எனப்படுவோர்

அ) ஆசிரியர் ஆ) பெற்றோர் இ) புலவர் ஈ) அறிஞர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. **தமிழிசை** என்பது

அ) இயல்புப் புணர்ச்சி ஆ) கெடுதற் புணர்ச்சி

இ) தோன்றற் புணர்ச்சி ஈ) திரிதற் புணர்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. வளையாத செங்கோல் வளைவதற்குக் காரணமானவன்

அ) சேரமன்னன் ஆ) சோழமன்னன்

இ) பாண்டியமன்னன் ஈ) பல்லவமன்னன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. அரசபடைகள் வீதியால் செல்லும்போது மக்களைச் ________________ என்று சுட்டுத் தள்ளினர்.

அ) கலகல ஆ) குடுகுடு இ) சடசட ஈ) நறநற

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. பின்வருவனவற்றுள் **ஆய்த எழுத்து**

அ) ஞ ஆ) ம இ) அ ஈ) ஃ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. மாநாய்கனின் மகள்

அ) மாதவி ஆ) மாதுரி இ) கண்ணகி ஈ) ஐயை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. நிகழ்கால இடைநிலை

அ) கின்று ஆ) ப் இ) வ் ஈ) த்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. **ட்** என்ற எழுத்தின் இனவெழுத்து

அ) ன் ஆ) க் இ) ஞ் ஈ) ண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. காய்கதிர்ச் செல்வனே! எனக் கண்ணகி அழைத்தது

அ) நிலாவை ஆ) கதிரவனை

இ) வானத்தை ஈ) மழையை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. பாட்டி வந்தான் என்பது

அ) இடவழு ஆ) காலவழு

இ) திணைவழு ஈ) பால்வழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. தமிழர்கற்கள் எனச் சாலைஇளந்திரையன் குறிப்பிடுவது

அ) சூளைக்கற்கள் ஆ) சாமிக்கற்கள்

இ) வைரக்கற்கள் ஈ) நடுகற்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. வாதோழியே! இனியும் இப்படி இருக்கமுடியாது எனக் கூறிய கவிஞர்

அ) இரவி ஆ) அம்பி

இ) உதயைவீரையன் ஈ) சாலைஇளந்திரையன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. தமிழகத்தில் கண்ணகிக்குச் சிலை வடித்தவன்

அ) சேரன்செங்குட்டுவன் ஆ) சோழமன்னன்

இ) கயவாகு ஈ) பாண்டியமன்னன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. ஓர் ஆவின் கன்றுக்காகத் தன்மகனைத் தேர்க்காலில் இட்டுக்கொன்ற மன்னன்

அ) சிபி ஆ) இராசராசசோழன்

இ) மனுநீதி ஈ) எல்லாளன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. **மொ** என்ற எழுத்து

அ) உயிரெழுத்து ஆ) மெய்யெழுத்து

இ) உயிர்மெய்யெழுத்து ஈ) ஆய்தஎழுத்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. **கேட்டனர்** என்பதன் விகுதி

அ) ஆர் ஆ) கேள் இ) ட் ஈ) அர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

யேர்மனியில் போர் நடந்து கொண்டிருந்த காலத்தில் படைவீரர்கள் பலரும் பாசறையில் தங்கியிருந்தனர். அவர்களிடம் இருந்த உணவு முடிந்துவிட்டது. பக்கத்திலுள்ள வயல்களிலிருந்து நெற்கதிர்களை அறுத்துவரப் படைத்தலைவரும் வீரர்களும் வயல்களை நோக்கி நடந்து கொண்டிருந்தனர். தூரத்தில் ஒரு குடிசை தெரிந்தது. அங்கே சென்று கதவைத் தட்டினர். ஒரு முதியவர் கதவைத் திறந்தார். முதியவரிடம் ஐயா எங்களிடம் இருந்த உணவுப்பொருட்கள் எல்லாம் தீர்ந்து விட்டன. எந்த வயலில் முற்றிய நெல் இருக்கிறது என்று காட்டுவீர்களா என்றார் படைத்தலைவர். உடனே முதியவர் படை வீரர்களை அழைத்துக் கொண்டு நடந்து சென்றார். அங்கே ஒரு வயலில் முற்றிய நெற்கதிர்கள் நிறைந்து காணப்பட்டன. இந்த வயலில் உள்ள நெற்கதிர்களை அறுத்துக் கொள்வோமா என்று படைத்தலைவர் கேட்க அதற்கு முதியவர் மறுத்து விட்டார். அந்த வயலையும் தாண்டி நடந்து சென்றனர்.தூரத்தில் வேறு ஒரு வயலைக் கண்டனர். அங்கே நெற்கதிர்கள் முற்றியிருந்தன. உங்களுக்கு வேண்டிய நெற்கதிர்களை இங்கே அறுத்துக் கொள்ளுங்கள் என்று முதியவர் வீரரிடம் கூறினார். அப்போது படைத்தலைவர் முதியவரிடம் எதற்காக இவ்வளவு தூரம் எங்களை அழைத்துக் கொண்டு வந்தீர்கள் நாம் முதலில் பார்த்த வயலிலேயே கதிர்களை அறுத்திருக்கலாமே என்றார். நீங்கள் சொல்வது சரிதான் ஆனால் நாம் முதலில் பார்த்தது எனது வயல் அல்ல இதுதான் எனது வயல் என்று முதியவர் கூறினார். முதியவரின் நேர்மையைக் கண்டு படைத்தலைவர் வியந்து போனார்.

1. தரைப்படைவீரர்கள் எங்கே தங்கி இருந்தனர்?

2. ஏன் படைத்தலைவர் வியந்தார்?

3. குடிசையில் இருந்தவர் யார்?

4. வயலில் முற்றியிருந்தவை எவை?

5. முதியவர் பற்றிய உமது கருத்து என்ன?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. பேராற்றலும் தோற்கும் என்ற கருத்தை விளக்கும் பழமொழி எது?

2. யாழ்நூலக அழிப்பின் முதன்மை நோக்கங்கள் எவை?

3. "பெண்ணே இந்நகரில் யார்யார் பிழைக்க வேண்டும்" என யாரால் யாரிடம் கேட்கப்பட்டது?

4. தலைக்கோல் என்பது என்ன?

5. கவிஞர் நுஃமான் புத்தரின் உடலம் எங்கே கிடந்ததாகப் பாடலில் குறிப்பிடுகின்றார்?

6. "எம்மால் முடியும் எதிர்த்தால் விடியும்" என்ற பாடல் வரிகள் இடம்பெற்ற இக்காலக் கவிதைத் தலைப்பு எது?

7. கோவலன் வெட்டுண்டு மண்மேல் சரிந்த வேளையில் ஆயர்பாடியில் தோன்றிய தீக்குறிகள் எவை?

புள்ளிகள் 10

**4) பின்வரும் கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

இனிய பொங்கல் வந்ததே
இன்னல் எங்கும் நீங்கவே

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. அ. அல்வழித்தொகை எத்தனை வகைப்படும்?

______________________________

______________________________

ஆ. பின்வரும் தொகைகளுக்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

ஆறாம் வேற்றுமைத்தொகை :-

______________________________

பண்புத்தொகை :-

______________________________

2. கீழுள்ள மரபுத்தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

திக்குத்திசை :- ______________________________

______________________________

கடகட :- ______________________________

______________________________

பச்சைப்பசேல் :- ______________________________

______________________________

3. அ. உயிரெழுத்துகள் எத்தனை?

______________________________

ஆ. உயிர்நெடில் எழுத்துகளைத் தருக.

______________________________

4. சொல்லிய உறுப்புகள் அனைத்தும் இடம்பெறுமாறு சொல்லியம் ஒன்று எழுதுக.

______________________________

5. சொற்பொருள் தருக.

| | | | |
|---|---|---|---|
| மிடறு :- | ______________ | பாங்கியர் :- | ______________ |
| கற்பம் :- | ______________ | மாற்றான் :- | ______________ |
| தேராது :- | ______________ | எள்ளி :- | ______________ |

புள்ளிகள் 15

6) **பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

தமிழருடைய தாய்நாடு தமிழகமும் தமிழீழமுமாகும். இன்று தமிழர் தங்கள் சொந்தமண்ணை விட்டு வெளியேறி உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர். இதன் முதன்மைக்கரணியம் இன அழிப்பே. எம்மினங் காலங்காலமாக மாற்றானின் அச்சுறுத்தலுக்கு மட்டுமன்றி சித்திரவதை, காணாமற்போதல், படுகொலை போன்ற பெருந்துன்பங்களிற்கும் ஆளாகிக் கொண்டே இருக்கின்றது. இவை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தொடர்ந்தும் இடம் பெறுவதை நாம் வானொலி, செய்தித்தாள், இணையம் போன்ற ஊடகங்களினூடாகக் கேட்டும் பார்த்தும் வாசித்தும் அறிந்துகொண்டே இருக்கின்றோம். இந்நிலை தொடர்ந்தால் எம்மினம் கொஞ்சம்கொஞ்சமாக அழிக்கப்பட்டு முற்றாக அழிந்துவிடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எம் உறவுகள் சிதைக்கப்படுவதை நாம் தடுத்து நிறுத்த வேண்டும். தமிழரின் உண்மை நிலையை உலகிற்கு எடுத்துக் கூறவேண்டும். எம் இனத்தைக் காக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் எமது செயற்பாடுகளை நாம் ஒன்றுசேர்ந்து தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

**சுருக்கத்திற்கான குறிப்புக்கள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✷ சிலப்பதிகாரம்
- ✷ உமது தாயக மக்களுக்கு நீர் செய்ய வேண்டிய கடமைகள்.
- ✷ இக்காலக் கவிதை இலக்கியங்கள் என்ற பாடத்தில் நீர் கற்றவற்றைத் தொகுத்துத் தருக.

புள்ளிகள் 20